**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 27-08-2024**

**தி -நீல்கிரிஸ்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-08-27 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-08-28 | 2024-08-29 | 2024-08-30 | 2024-08-31 | 2024-09-01 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 12.0 | 10.0 | 14.0 | 16.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 17.0 | 16.0 | 15.0 | 15.0 | 14.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 13.0 | 12.0 | 11.0 | 11.0 | 11.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 70 | 80 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 10 | 10 | 8 | 8 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 250 | 270 | 270 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 7 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 14- 17°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 11-13°செ ஆகவும் இருக்ககூடும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் இருக்ககூடும்.சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-10 கி.மீஅளவுக்கு வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

| |
|---|
| விதை மூலம் பரவும் நோய்களை நிர்வகித்தல்: விதைகளை டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லம்@ 4 கிராம்/கிலோ அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் @ 10 கிராம்/கிலோ கொண்டு விதை மூலம் பரவும் நோய்க்கிருமிகளை கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்யலாம். மேலும், எந்தவொரு பயிர்திட்டத்திற்கும் முன்பு மண் பரிசோதனை செய்யப்பட வேண்டும். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| i. போதிய வடிகால் வசதி வழங்குதல். ii. உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு போன்ற உழவியல்/ பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை ஒத்திவைக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| செங்கிழங்கு | பீட்ரூட் பயிரில் செர்கோஸ்போரா இலைப் புள்ளியை நிர்வகிக்க: • பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி அழிக்க வேண்டும். • பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ள வேண்டும். • காப்பர் ஆக்ஸி குளோரைடு 0.3% 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| பாகற்காய் | காய்கறி பயிர்களை தாக்கும் நச்சுயிரிநோய்களுக்கான ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள்: • நோயற்ற விதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் • ஒரே பயிரை திரும்ப திரும்ப பயிரிடக் கூடாது • நச்சுயிரி தாக்கப்பட்ட செடிகளை சேகரித்து, அழிக்க வேண்டும் • நாற்றங்கால் படுக்கைகளின் மீது நைலான்வலை (அ) வைக்கோல் கொண்டு மூட வேண்டும் • மிளகாய் போன்ற காய்கறி பயிர்களை பயிரிடும் போது, 2-3 வரிசை மக்காச்சோளம் (அ) சோளத்தை வரப்பு பயிராக பயிரிட வேண்டும் • ஒட்டுப் பொறிகளை (நீலம்&மஞ்சள், முறையே) ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வயலில் பொருத்தவும் • தேவையெனில், டைமெத்தோயேட் @ 2.0 மிலி/லிட்டர் (அ) தையாமீதக்ஸம் @ 0.2 மிலி/லிட்டர் (அ) இமிடாக்ளோப்ரிட் @ 0.2 மிலி/லிட்டர் என்ற அளவில் கைத் தெளிப்பான் கொண்டு மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| தேயிலை | தேயிலையில் கொப்புள கருகல் நோய் மேலாண்மை முறைகள்: • பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தளிர்களை கவாத்து மூலம் நீக்கி அழிக்கவும் • ஹெக்ஸகோனசோல்@ 200 மிலி + காப்பர் ஆக்ஸி குளோரைடு@ 210 கிராம்/எக்டருக்கு 5 |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | நாட்கள் இடைவெளியில் (அல்லது) • காப்பர் ஆக்ஸிகுளோரைடு@ 210 கிராம் + புரோபிகோனசோல்@ 200 மிலி/ எக்டருக்கு 10 நாட்கள் இடைவெளியில், குறிப்பாக ஜூன்-செப்டம்பர் மற்றும் அக்டோபர்- நவம்பர் மாதங்களில் தெளிக்கவும் •எளிதில் நோய் பாதிக்கக் கூடிய ரகங்களை தவிர்த்து, நோய் எதிர்ப்புரகங்களை பயிரிடவும் மத்திய பூச்சிக் கொல்லி வாரியப் பரிந்துரைகள் • பின் வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும. • ஹெக்ஸகோனசோல் 5% EC @ 200ml/ha (அல்லது) • ப்ரோபிகோனசோல் 25% EC @ 125-250ml/ha (அல்லது) • கார்பென்டாசிம் 12%+ மான்கோசெப் 63% WP @ 1250g/ha (அல்லது) • ஹெக்ஸகோனசோல் 4% + ஜினெப் 68% WP @ 625g/ha |